# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PR/COP/POLI/Circulars
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 25.05.2015

பொது தொழில் முயற்சி சுற்று நிருப இல. PED 1/2015

பொது தொழில் முயற்சிகள்
திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு-01

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும்
அரச உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் அலுவலர்களுக்கான போக்குவரத்து வசதிகள்.**

1. அரச உடமை தொழில் முயற்சிகளிலுள்ள வாகனங்களுக்கு உரித்துடைய அலுவலர்களுக்கான வாகனப் பயன்பாடு, மாதாந்த எரிபொருள் வரையறை, அலுவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவுகளை வழங்குதல் மற்றும் வாகனம் உரித்தல்லாத மத்தியதர முகாமையாளர்களுக்கான குழு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் என்பன பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

2. ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்கள்
பின்வரும் அலுவலர்கள் தமது உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்த உரித்துடையவர்கள்

2.1 தலைவர் / தகைமையுடைய அதிகாரி

2.2 பிரதான நிறைவேற்று அலுவர் / முகாமைத்துவப் பணிப்பாளர் / நிறைவேற்றுப் பணிப்பாளர் / பணிப்பாளர் நாயகம்

2.3 முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றிளை அல்லது 2006 இன் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்திற்கு அமைவாக HM 1-1 வகுதிக்குச் சமனான அல்லது அதற்குமேற்பட்ட பதவியிலுள்ள பிரதான நிதி அலுவலர் / பிரதான தொழிற்பாட்டு அலுவலர் / ஏனைய பிற அலுவலர்கள்

3. ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்களுக்குரித்துடைய அலுவலர்களுக்காகன எரிபொருள் ஒதுக்கீட்டு வரையறை

3.1. உத்தியோகபூர்வ வாகன ஒதுக்கீட்டுக்கு உரித்துடைய அலுவலர்கள் அவர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவுகளை பின்வருமாறு பெற்றுக் கொள்ளமுடியும்.

| ஒதுக்கீட்டு வாகனத்துக்குரித்துடைய அலுவலர் வகுதி | மாதாந்த எரிபொருள் வரையறை (லீற்றர்கள்) | அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு |
|---|---|---|
| தலைவர் / தகைமையுடைய அதிகாரி | 170 | அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் வரையறை (லீட்டர்கள்) X மாதத்தில் முதலாம் திகதியில் எரிபொருள் விலை |
| முகாமைத்துவப் பணிப்பாளர் / நிறைவேற்றுப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் / பணிப்பாளர் நாயகம் | 150 | |
| பிரதான தொழிற்பாட்டு அலுவலர் / பிரதான நிதி அலுவலர் | 140 | |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2006 இன் 30 ஆம் இலக்க மு.சே.தி சுற்று நிருபத்திற்கமைவாக HM1-1 வகுதிக்குச் சமனான அல்லது அதற்கு மேற்பட்ட பதவியுலுள்ள எவரேனும் அலுவலர் | 120 | |

3.2 விஷேட சந்தர்ப்பங்களின் கீழ் அலுவலர் ஒருவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ பணிகளை மேற்கொள்வதற்கு மாதாந்த எரிபொருள் வரையறை பற்றாக்குறையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அலுவலரினால் பயன்படுத்தப்பட்ட மேலதிக எரிபொருளுக்கான செலவினம் பின்வரும் வகையில் அங்கீகாரம் பெறப்பட்டு மேலதிக எரிபொருள் பாவனையில் உண்மையான நிலை அறியப்பட்டு அதன் அடிப்டையில் மீள் கொடுப்பனவு செய்யப்பட முடியும்.

3.2.1 தலைவர் அல்லது தகைமையுடைய அதிகாரி - பணிப்பாளர் சபையின் சிபாரிசுடன் நிரல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் அங்கீகாரம்

3.2.2. நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் - பணிப்பாளர் சபையின் அங்கீகாரம்

3.3. உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் ஒருவர் ஒன்றில் உத்தியோகபூர்வ வாகனமொன்றினைப் பயன்படுத்துவதற்கான அல்லது மாதந்த போக்குவரத்துக் கொடுப்பனவான ரூபா 30,000/- மற்றும் குறித்த பதவிக்கு ஏற்புடைத்தான மாதாந்த எரிபொருள் கொடுப்பவினைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பத்தேர்விளைக் கொண்டுள்ளார். எவ்வாறாயினும், அத்தகைய அலுவலர்கள் சாரதி ஒருவரையோ அல்லது சாரதிக் கொடுப்பனவினையோ பெற்றுக் கொள்ள முடியாது.

3.4 போக்குவரத்துச் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு என்பன மாதாந்த சம்பளத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

3.5 ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு அல்லது போக்குவரத்து கொடுப்பனவுகளுக்கு உரித்துடைய அலுவலர்கள் வேறேதேனும் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3.6 பணிபுரியும் இடத்திலிருந்து 40 கிலோ மீற்றர்களுக்கு மேற்பட்ட விஷேட உத்தியோகபூர்வ பணிகளில் அலுவலர்கள் குழுவொன்றாக சமூகமளிக்கவேண்டிய சந்தர்ப்பத்தில், அவைவரும் ஒரே தடவையில் பயணிப்பதற்கான போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

3.7 அலுவலரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவியினை வகிப்பாராயின் அவரது உண்மையான பதவிக்காகக் குறித்துரைக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவு மாத்திரமே அவருக்குரித்துடையதாகும். எவ்வாறாயினும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேலதிக பதவிகளுக்கான உத்தியோகபூர்வ பிரயாணத்திற்கான மேலதிக எரிபொருளினை அத்தகைய பதவி / பதவிகளுக்கு குறித்துரைக்கப்பட்ட ஆக்ககூடிய வரையறைக்குட்பட்ட வகையில் பெற்றுக்கொள்ள முடியும்.

3.8 ஒதுக்கீட்டு வாகன உரித்துடைய அலுவலர்களின் தனிப்பட்ட பிரயாணத்திற்காக சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் பிற இணைந்த கொடுப்பனவுகள் குறித்த அலுவலர்களினால் வழங்கப்படுத்தல் வேண்டும்.

3.9 ஒரு மாதத்திற்கு அதிக காலம் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு கொடுப்பனவற்ற விடுமுறையிலுள்ள அலுவலரொருவர், பணிப்பாளர் சபையின் விஷேட அங்கீகாரமின்றி போக்குவரத்துக் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ வாகனப் பாவனை அல்லது சாரதியொருவரின் சேவையினைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கு உரித்துடையவராக மாட்டார். எவ்வாராயினும், உரித்துடைய அலுவலர் கொடுப்பனவற்ற விடுமுறையிலிருக்கும் பொழுது நீண்ட கால சுகயீனம் போன்ற அவரது கட்டுப்பாட்டினை மீறிய காரணங்களினால் ஒரு மாதத்தினை விஞ்சுகின்ற சந்தர்ப்பத்தில் இவ்வாறன வசதிகளை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கமுடியும்.

## 4. வாகனங்கள் / குழுப் போக்குவரத்து

4.1 அரச தொழில் முயற்சிகளின் சிரேட்ட முகாமையாளர்கள் வாகனங்களின் உரிய கட்டுப்பாடு, பராமரிப்புக்கான போதிய முறைமைகள் மற்றும் நடைமுறைகளினை உறுதிப்படுத்துவதுடன் செலவினங்கள் தொடர்பிலும் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

4.2 நிறுவனத்தினால் வழங்கப்படும் குழுப் போக்குவரத்தானது அலுவலகத்திலிருந்து போய்வரும் இரு வழித்தூரம் ஆகக்கூடியது 100 கிலோ மீற்றர்களாக வரையறுக்கப்படுதல் வேண்டும்.

## 5. இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் சுற்றுநிருபங்களை இரத்துச் செய்தல்

2008 ஜுலை 28 ஆந் திகதியிடப்பட்ட 50 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதியிடப்பட்ட 12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றுநிருபத்தின் கீழ் வெளியிடப்பட்ட "நல்லாட்சிக்கான பொது தொழில் முயற்சிகளின் வழிகாட்டல்கள் கைந்நூல்" இன் 8.3.5 ஆம் வாசகம் என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், மேற்குறித்த சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டலுக்குப் பதிலாக வெளியிடப்பட்டுள்ள 1/2015 ஆம் இலக்க சுற்றுநிருபம் 2015 ஜுன் 01 ஆந் திகதிலிருந்து பயன்பலுப்பொறும்.

6. இச்சுற்றுநிருபம் தொடர்பான தெளிவுபடுத்தல்கள்

இச்சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் தொடர்பில் பிரதான நிறைவேற்று அலுவலர் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல் வேண்டும். இச்சுற்றுநிருபம் தொடர்பான தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கு பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் திரு. ஜே.எம்.யு.பீ. ஜயமஹா (தொ.பே.இல. 2484623) அல்லது பணிப்பாளர் திரு எம்.ஆர்.சீ.ஆர் மீபுர (தொ.பே.இல. 2484628) ஆகியோரை தொடர்பு கொள்ள முடியும்.

ஒப்பம் / ஆர்.எச்.எஸ் சமரதுங்க
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபை உள்ளூராட்சி, சனநாயக ஆட்சி அமைச்சு
3. கணக்காய்வாளர் நாயகம்